உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஹு (1889) ஆவணி 28-ம் உ    அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை 400. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்    தொலைபேசி: 356

பத் - அகூ]    யாழ்ப்பாணம்:- பிங்கள் ஹு மாசி மீ ரு - உ வெள்ளிக்கிழமை (17 - 2 - 1978)    [இல: சச

# வடமொழிக் காந்தபுராணக் கடலில் வளமாய்க் கடைந்தெடுத்த அமுதம்

## மாவையில் கச்சியப்பர் விழா

காலைப் பூசையும் கந்த சுவாமியார் வீதிவலமும் முடிந்ததும் கந்தபுராண ஏடுகள் ஊர்வலமாகக் கொணரப்பெற்றன.

ஆதீன கர்த்தர் சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள ஆசியுரையாகக் கந்த புராணபடனம் மாவையில அன்றுதொடக்கம் இன்று வரை நிகழ்வது ஆலய மகத்துவத்தைக் காட்டு கின்றதெனக் கூறினர்.

பண்டிதர் வே. சங்கரப் பிள்ளை அவர்கள் வரவேற் புரை பகரும் வகையில் மாவை ஆதீனகர்த்தர் சமய வளர்ச்சிக்குப் பணி செய்துவரும் பண்பாளர் என்றும், கச்சியப்ப சிவா சாரியருக்கு விழாவெடுப்ப தில் பெருமகிழ்ச்சி கொள பவரும் என்று பாராட் டினர்.

சமாதான நீதிபதி வ. சரவணமுத்து அவர்கள் ஆரம்பித்துவைக்கும்உரை யில சைவ மகாசபையின தொண்டு நல்லவண்ணம அமைந்திருக்கின்றது என்றனர்.

தலைமையுரை ஆற்றிய திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் கந்தபுராணம் எனும் கற்பகதருவை நாட் டிய கச்சியப்ப சிவாசாரி யார் சைவ சிந்தனையை ஊக்குவித்துச் சித்தாந்தப் பொருளைச் செய்யுள் வடி வாக்கி உயர்த்தி வைத்த னர் என்றும அன்னாரின நாமம் பொன்னேபோற் போற்றப்படல் வேண்டும என்றும் குறிப்பிட்டார்.

கந்தபுராணக் கலாசாரம் என்ற பொருள் பற்றிப் பண்டிதர் இ. நமசிவாயம அவர்கள் வினைப் பயனின விளைவை விளக்கும் கந்த புராணம் சூரன் முதலான அசுரர் மூலம அப்புராணம் கற்போரையும் கேட்போ ரையும இப்பிறப்பில் இனி ப்பாவஞ் செய்யா திருக்க உதவுகின்றதென்றுப் சில அம்சங்களை நன்கு விளக் கிக் காட்டினர்.

மாவை முத்தமிழ் மன் றத்தினரும் பண்ணிசைச் செல்வன் திருநாவுக்கரசு வும் திருமுறை ஓதிப் பக்தி மயத்தைப் பரவ வைத தனர்.



## கச்சியப்ப சிவாசாரியார் கணித்த கந்தன் கதை

சங்கர சங்கிதையென்பது வடமொழிக் காந்த புராண ஆறுகாண்டங்களில் ஐந்தாவது. சனற் குமார, சூத, பிரம, விட்டுணு சங்கர, சூர சங்கிதைகள் அந்த ஆறும்.

பன்னிரண்டு கண்டங்களையுடைய சங்கரசங்கிதை யில் முதலாவது சிவரகசிய கண்டம், மூவாயிரம் கிரந்தங்கள் கொண்டது சங்கிர சங்கிதை,

சிவரகசிய கண்டத்தில் முதற்கண் உள்ள ஆறு கண்டங்களிற் காணப்பட்டனவையே. செந்தமிழ்க் கந்தபுராணம்.

இத்தகையதையே கச்சியப்ப சிவாசாரியர் செய்யுட்களாய் யாத்தனர் என்றால் இவர்தம்பெரு மையை யார்தான் எடுத்துரைக்க வல்லார்?

கடலினுட் கடலாகிய கந்தபுராணத்தைக் கரை காண்பது கடவுளின் காருண்யத்தைக் காண்பதாகும். இந்த நற் புராணத்தில் எந்தப்பகுதியை எடுத்தாலும்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## மலேசியாவில் மகாசந்நிதானத்தின் மணி விழா

ஆறுபத்து ஆண்டுகள் பூர்த்தி ஆவது அருமை. அதனிலும அருமை அவ் வாண்டுகள் அரன் சேவை யில் அமைவது.

நல்லை ஆதின குருமகா சந்நிதானம ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரியர் அமர்களின் சப்திமப்த விழா மலேசியாவில் செந் தூலில் ஸ்ரீ ஆதிஸ்வரப் பெருமான் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற் றது. அவ்வமையம் ஏராள மான சைவ அன்பர்கள் கலந்துகொண்டுவிழாவைப் பூரணப் பொலிவாக்கினர்,

சைவப் பணிகளைத் தக்க வாறு மதித்து ஆதரவு எப்பொழுதும் நல்கும் இல ங்கைச் சுங்கப் பகுதி உதவி அதிகாரி திரு. கே, கே. சுப்பிரமணியம் அவர்களும இவ் விழாவில் விசேடமா கப் பங்குபற்றினர். மகா சந்நிதானம அன்பர் சுப் பிரமயணியத்துக்கு "இர சிககலா மணி" என்ற பட் டஞ் சூட்டி மகிழ்ந்தனர்.

## சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழா

புங்குடுதீவு கிழக்கு தல் லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில் பெருந் திருவிழா 13-2-78 கொடியேற்றத்துடன் ஆரம் பமாயது 21-2-78 செவ் வாய்க்கிழமை தேர்த் திரு விழா நடைபெறும்.

22-2-78 புதன் சூரியோ தய வேளையில் 'மாசிக் கடலாட்டு விழா' கண்ணகி யம்மன் கோவிலையடுத்த கடலில் 'குளத்து விமல்' என்னுந் தீர்த்தத்தில் நிக ழும். தேர்த் திருவிழாவி லன்று வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் இயற் றிய முருகப் பெருமான் திருவூஞ்சலும் வெளிவரும்.

## மடதருமத் திருப்பணியில் மாதராரின் மகத்தான பங்கு

### புதுவழியிற் புண்ணிய நாச்சியார் மதநெறி வளர்த்தனர்

அடியார்க்கும் அடியார்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தானும் ஒருவராகப் பெரு மதிப்புக் கொடுத்த முறை மக்களிடம் பரவுமேயானுற் சமயநெறி தானகவே நிகழ்ந்துகொண்டிருக்கும்.

திருத்தொண்டர்கள் ஆற்றிய பெரும் பணியைப் போற்றி இறை பணியில் நின்ற புண்ணியநாச்சி அம்மையாரும திலகவதியார், மங்கையர்க்கரசியார் முதலிய மாதரார் பரப்பிய சைவத் தொண்டினைச் செய்து வந்தார். அந்தப் பெணகள் திலகத்தின் பெரும் பணியை நாளை மறுநாள் சைவ பரிபாலன சபையார் போற்றிக் குருபூசை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன,

புண்ணிய நாச்சியாரின் வரலாற்றினைப் புத்தக வடிவமாகப் பொதுமக்கள் அறிய வைப்பது ஒரு புண் ணியப் பணியாகும். இந்துசாதனத்தில் இந்த வர லாறு வெளியிடப்பட இருக்கின்றது.

பெருந்தொகைப் பரப்பு விசாலமான பல காணி களைத் தருமஞ் செய்து சைவ நெறி நின்ற இவ் வம்மையார் சிதம்பரத்திலும் இத்தகைய தொண் டினைச் செய்தார் என்றால நாவலர் நற்றவையாரின் அடிச்சுவட்டில் வாழ்ந்தவர் இவர் என்பது புலனாகும்.

## முக்காலும் சத்தியம்!

"இக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியம மாகக் கேட்பவர்கள் நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துரு ஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாம் தாம், வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்து உரைக்கப்பட்ட விஷயம். இது சத்தியம்! சத்தியம்! முக்காலும் சத்தியம்!"

— ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்

பிங்கள ஹூ மாசி மீ" ரு-உ வெள்ளி


## புன்மையைப் போக்கப் புராணங்கள் படிப்போம்

புராணங்கள் சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை விளக்கும் கருவிகள். தனி இலக்கண பாடமாக அமைகின்ற சித்தாந்தக் கொள்கைகளை அமைத்து இறைவனின் இன்னருளைப் பெற்ற பேறுகளைப் அப்பேறுடையவர்களையும் பாட்டுடைப் பொருளாக வைத்து சிவநேசச் செல்வர்களாகவுள்ள அறிஞர்கள் இயற்றிய இப் புராணங்கள் சைவ இலக்கிய அமைப்பில் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன.

வரலாற்றின் பெருமையாலும் வழிபட வைக்கும் திறமையாலும் புராணங்கள் தரம் பிரிக்கப்பட்ட மரபுண்டு. திருத்தொண்டர் புராணம் திருவிளையாடற் புராணம் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆவன முதற்படியிலுள்ளன, புராணங்களுக்குள் எல்லாம் பெருமையானதென்ற கருத்துத் தொனிக்கத் திருத்தொண்டர் புராணம் பெரிய புராணம் எனப்படுகின்றது.

ஆகவே கந்தபுராணம் தலை சிறந்த சைவ இலக்கியம் என்றவகையிலே ஆலயங்களில் விசேடமாக கந்தன் கோயில்களில் நியமம் வகுத்துப் படனஞ் செய்யப்படுவது ஈழச் சைவ நெறியில் அதி முக்கிய நிகழ்ச்சியாகும்.

ஆராய்ச்சி வழியாகச் சமயத்தை நிலை நாட்டும் வழக்கம் ஒன்று பரவி வரும் இக்காலத்தில் அம்முறையிலும் பார்க்க மெய்கண்ட சாத்திரங்களையும் திருமுறைகளையும் புராணங்களையும் உள்ளன்புடன் கற்றுத் தகைமையுடன் சைவ நெறியில் நின்று இறைவனை வழிபட்டு அறம் வளர்த்து வினை தீர்ப்பதே வேண்டப்படும் என்பது அறிஞர்கள் கண்ட உண்மை.

## 'உய்வகை அருள்' என்று உருகிக் கேட்ட பதிகம்

பழமொழி மூலம் தம் பற்றுமையைச் சுந்தரமூர்த்திகள் அழகாக எடுத்துக் கூறுவது வழக்கம். கழுதை குங்குமம்தான் சுமந்(து) எய்த்தாற் கைப்பர்' என்று தன் பழுதினை எடுத்துக் கூறும் பதிகம் திருவிடை மருதூரிலே திருவாய் மலர்ந்தருளப்பட்டது.

வன்றொண்டர் நன்றியில் வினை இன்னமும் செய்கின்றேனே! என்றிரங்குவது உணர்ச்சியை ஊட்டுவிக்கின்றது.

"நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்"

என்று மக்கள் தங்களைச் சூழ்ந்து கொண்டும் சூழவும் இருக்கின்ற துன்பங்கள் மத்தியிலும் மேலும் மேலும் தீய வினைமையே செய்கின்றனர் எனச் சுட்டிக் காட்டியது காண்க.

இக்கருத்தை மேலும் விளக்கும்வண்ணம் "புல்நுனைப் பனி வெங்கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை பொருளிலை நாளும் என்னெனக்கினி இற்றைக்கு நாளை யென்றிருந்திட ருற்றனன் எந்தாய்" - எனப் பயனில்லாத நிலையில்லாத இவ் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்த இன்று என் செய்வது? நாளை என் செய்வது? என மீண்டும் மீண்டும் கவலையால் நெஞ்சத்தைப்பற்றி எச்சரிக்கின்றார் சுவாமிகள்.

இன்னமும் மனித இயற்கையின் இழிவை எடுத்

## கந்தையா சுவாமிகள் எந்தையடி இணைந்தனர்



சுவாமி நான் என்று சொல்லிக்கொண்டு சுற்றுலாச் செய்யும் சுவாமிகள் போலல்லாது கண்ணுறுவோர் இங்கே கடவுள் நண்ணியிருக்கின்றார் என்று எண்ண வைத்த சுவாமிகள் சிவஸ்ரீ கந்தையா சுவாமிகள்; இவர்களைக் குடைச் சுவாமியார் என்று கூறுவர் அடியார்கள். காரணம் குடை கையிற் பிடியாத காட்சி ஒருபொழுதும் இராது. இந்த அடையாளம் கடவுள் எங்களுக்கெல்லாம் குடைபோல நிழல் செய்பவர் என்பதையும் குறிக்கும் என்றும் சொல்லலாம்.

கடையிற் சுவாமி களைக்கண்டோர் எங்கள்
குடைகைச் சாமியார் கோலம் — விடையிற்
பெருமானின் எண்ணம் பெருகவைக்கும் என்பர்
அருளாளர் செம்மை அது.

## திருவிழாக்காணும் அடியார்கரு வாண வேடிக்கையேன்?

[ அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ]

திருக்கோயில்களில் துன்மார்க்கமுள்ள தாசிகளை அழைத்து நடனம் செய்விப்பது குற்றமாகும். உபயகாரர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அரியபொருளை. அறிவும் நல்லொழுக்கமுமுடைய சமயபோதகர்களையும், ஓதுவார்களையும் அழைத்துச் சற்பிரசங்கம் செய்வித்தும் வேதங்களையும் திருமுறைகளையும் அத்தியயனம் செய்வித்தும் உரகத்துக்கு வேண்டிய நெய் சமித்து முதலிய உபகரணங்களைக் குறைவின்றிக் கொடுத்தும், தீபங்கள் இரவும் பகலும் அவியாதபடி பாதுகாத்தும் இவை போன்ற பிற புண்ணியங்களைச் செய்தும் சிவபக்தி வளரும் வழியிற் செலவு செய்வது உத்தமோத்தமமாகும்.

இன்னும் சிலர் வாண வேடிக்கைகள் செய்து, அரி

துரைக்கும் வகையில்

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புல னென்வச மல்ல
நடுக்க முற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்தமர் நரகத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைம ருதுறை யெந்தை பிரானே.

[illegible] விடவும் தொடுக்க வேண் [illegible] வும் ஆற்றல் வேண்டுகின்றனர் உய்வதற்கு;

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மதிப்புரை

## வியற்றகு வித்தகன்

அமரர் ஆ. வி குலசிங்கம் அவர்களின் அந்தியக் கிரியை சம்பந்தமாக வெளியிடப்பட்ட நினைவு மலரில் அன்னாரின் வாழ்க்கை விசேடம் நன்கு காட்டப்பட்டிருக்கிறது.

பத்திரிகாசிரிய ஆற்றலைப்பற்றி இலங்கை "டெயிலி நியூஸ்" "ஒப்சேவர்" முதலிய பத்திரிகைகளின் பத்திராதிபராயிருந்த திரு ஜான்ஸ் திரு. குலசிங்கம் அவர்களின் பத்திரிகை ஆசிரியத் திறமைபற்றி அழகாகச் சுட்டிக்காட்டிய குறிப்பு இடம் பெறுகின்றது

யாழ் மேல்நீதிபதி ஜனுப் அப்துல்காதர், மல்லாகம் நீதிபதி திரு. மகேசுரத்தினம், சட்டத்தரணியர் திரு. கனகநாயகம், திரு. கதிர் காமசேகரம், திரு. பாலசிங்கம் ஆகியவர்களின் இரங்கல் உரைகள் இம்மலரை அழகுபடுத்துகின்றன.

"இந்துசாதன" ஆங்கிலப்பத்திரிகையில் அந்நாட்களில் திரு. குலசிங்கம் எழுதிய பத்திராசிரிய வசனங்கள் சில அறுவதிக்கப்பெற்று மலரை அலங்காரம் பண்ணுகின்றன.

வியற்றகு வித்தகர் திரு. குலசிங்கம் என்பதை மலர் வெளிப்படுத்துகின்றது.

சிற்றேடிவபொருளை அற்ப நேரத்திற் கரித்தும் புகைத்தும் எரித்தும் உற்சவ தரிசனம் செய்ய வரும் அடியார்களை அச்சப்படுத்தி உயிர்வதையும் புரிகின்றனர். அன்றியும் அவர்கள் உடற்பற்றை நீக்கிச் சிவத்தியானஞ் செய்யுங் காலமாகிய அரிய உற்சவ காலத்தில் உடற்பற்று முதலியவற்றை உண்டுபண்ணிப் பழி பாவங்கட்கு ஆளாகின்றனர். அப்பழி பாவங்கட்கு ஆளாகாது அப்பொருளை மகேசுர பூசை, வறியவருக்கு அன்னமிடுதல், ஆலயத் திருப்பணி முதலிய சிவ புண்ணியங்களிற் செலவு செய்வது உத்தமோத்தமமாகும். அது பிறவுயிரும் தம் உயிரும் மோக்ஷமடையக்கூடிய நல்வழியாயிருக்குமே இது. அமர்நீதி நாயனர் மகோற்சவ தரிசனத்துக்கு வந்த அடியார்களைத் திருவமுது செய்வித்துச் சிவலோகமடைந்த சரித்திரத்தாலும் கோச்செங்கட் சோழநாயனர் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்துச் சபாநாயகரது திருவடி நீழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும்.

திருப்பதி வணங்கவென்று
சென்றுறும் சிவநேசர்க்கும்
அருந்தியாற் களிகையாதி
பாடிட நாடினர்க்கும்
அருந்தக வன்னபான
மவரவர்க் குபபோகங்கள்
பொருந்தக வூனைப்போக்கிச்
சிவபுரம் புகுவர்தாமே.
— சிவதருமோத்தரம்,

திருப்பணி செய்வார்க்குஞ்
சிவனையுன்னிச் செம்பொனி
லிருப்புட லீவார்
பெறுக வீடு,
— சைவசமயநெறி

## வாழ்க்கை வட்டம்

### இலட்சம் எல்லாம் இலட்சம்

எங்கள் நாட்டுக்குப் பொருள் உதவி வழங்குகின்றோர்கள் இலட்சக் கணக்கான ரூபா பெறுமதிக்கு என்றபடி செய்திகள் முழங்குகின்றன. கேட்போர்உதடுகள் ஊறுகின்றன. ஆனல் பொதுமக்களைப் பொறுத்தமட்டில் கானல் நீர் போலத்தான் இந்த ஊற்று.

நாளுக்குநாள் எவ்வளவு உணவுக்குச் செலவாகின்றதென்று ஒருவர் கணக்கு வைத்துப்பார்த்தரர். மொத்தங்கூட்டியதும் கை நடுங்கத் தொடங்கியது பின் உடல்முழுவதும் நடுங்கியது. இந்தநிலையில் எந்த உதவிதான் என்ன செய்யும்.

### பொதுநல நாடுகள் தலைவர்களுக்கு எதிர்ச் சதி

அவுஸ்திரேலியாவில் அதிசயக் குண்டு வெடித்த செய்தி உலகம் அனைத்தையுமே கலக்கி விட்டது. பொதுநலநாடுகளின் பிரதிநிதிகள் பலர் அங்கு கூடிப் பொதுநலம்பற்றிப் பேசுவதற்கான அமைப்பைக் குழப்புவதுதான் குண்டு வீச்சின் குறிக்கோளானல் இனிமேல் எந்தவகையிலும் பொதுநலம் என்பது உருக் கொள்ளமாட்டாது.

### சர்வம் சதிமயம் ஆகின்றது

கலிகாலம் கிலிகாலம் என்பதை நாளுக்கு நாள் எல்லா நாடுகளும் விளம்பரம் செய்கின்ற சதிக்கூட்டம் அதிகரித்து வருகின்றது. சன்சோனி ஆணைக்குழுவினர் முன் சொல்லப்படும் சோக நிகழ்ச்சிகளைச் சேர்த்த ஒரு நூல் எழுதினல் அவலக்கதை வெளியீடுகளைப் படிப்போருக்கு விருந்தாயிருக்கும். சின்னஞ் சிறுதீவில் நடக்த வன்செயல்கள் இவையானல் பெரிய நாடுகளில் என்னென்னதான் நடக்கமாட்டாது.

### உயிரியலில் வளர்ச்சியா தளர்ச்சியா ?

விரிந்து மலர்ந்துவருகின்றது உயிரினம் என்று அறிஞர்கள் சொல்வர். குரங்கினத்தின் விரிவுதான் மனிதகுலம் என்று வரலாறு உண்டு. ஆனல் இப்பொழுது பார்த்தால் விரிவு சரிந்து பழையபடி இழிவு நிலைக்கு உயிர் இனம் சென்று கொண்டிருக்கின்றது போலும். மிருகத்தனம் மனுஷத்தனத்தைக் குடிகொண்டு விட்டது. கடவுள் கருணையின்றிக் காப்பாற்ற முடியாது.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இல்லாச்
செல்வரும் சேர்வது நாடு"

## வடமொழிக் காந்தபுராண...

( -ஆம் பக்கத்து வளர்ச்சி )

அந்தப் பகுதி தனிப் பெருமைக்குடையதாய்க் காணப்படுவதை அறிஞர்கள் அறிவார்கள்.

சைவ சித்தாந்தச் செம்மல் சிவபாதசுந்தரனர் கந்தபுராணம் கைவந்த குடும்பத்தைச் சார்ந்தவர் ஆகையால் அப்புராணத்தை ஆராய்ந்துவக்கும் ஆற்றலை இயல்பாகக் கொண்டவர் எனலாம். அத்தகையாரே தாம் அநுபவித்த பெருஞ் செல்வத்தில் ஒரு சின்னஞ் சிறு பகுதிக்கே உரை வகுத்து நூல் வெளியிட முடிந்தது.

சிர்க்குமரேசன் கொண்ட திருப்பெருவடிவத்தை விளக்கும் பகுதியாகிய சூரபன்மன் வதைப்படலத்து நானூற்றிருபது தொடக்கம் முப்பத்திரண்டு முத்துக்களைக் கோத்துச் சைவ சித்காந்தத்தை விளக்கும் அரிய உரை நடை ஒன்றை வெளியிட்டுச் சைவம் போதித்தனர்.

கச்சியப்ப சிவாசாரியர் அகந்தை, போதம், மானம் என்ற தன்மைகளைச் சூரன் வாயிலாகச் சைவ சித்தாந்த அடிப்படையில் விளக்கிய வித்தகம் புராண போதமாகும்.

திருப்பெருவடிவங்கண்ட சூரன் மூற்றவப் பயனல் ஞான வுணர்ச்சி தோன்றினும் அகந்தை முற்றாக நீங்காது இறைவனுடன் பொருதுவதே நீங்காப் புகழ் என நினைந்து மீண்டும் மயங்கினன். பெருவடிவம் மறைந்தது. அருகியது அசுரன் கொண்ட மெய்யறிவும்,


இவ்வளவு நுணுக்கமான தத்துவக் கருத்தைச் செவ்வியதாகச் செய்யுள் மூலம் கந்தன் கதையை விரிக்கும் வகையில் விளக்கிய வித்தகர் கச்சியப்ப சிவாசாரியருக்கு ஆண்டுக்கு ஒருமுறையல்ல அனைத்து நாட்களிலும் விழாவெடுத்தாலும் வேட்கைதணியாது.

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணும் துடித்தன புரை மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயன்ஈ தன்றே.

ஆழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

## திருப்பணித் தவமணி

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை



நல்லை ஆதீனத்தின் மேலாளராகவும், கல்வி, கலை, சமயப் பொறுப்பாளராகவும் அரும்பணி புரிந்த அமரர் திருப்பணித் தவமணி வே. சபாபதிப்பிள்ளை அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் (15-2-78) புதன்கிழமை மாலை 6 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் நிகழ்ந்தது. அத்தருணம் சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்கள் அவர்கள், "இந்து சாதன" முகாமையாளர் திரு. க. தர்மலிங்கம் அவர்கள், ஆதீன மேலாளர் திரு. எஸ். சிதம்பர மூர்த்தி அவர்கள், சைவப்புலவர் சிவமணி வே. கந்தசாமி அவர்கள், முன்னைநாள் மாநகர உதவி முதல்வர் ஆ. துரைராஜசிங்கம் அவர்கள், பண்டிதர் ஆர். கே முருகேசு ஆகியோர் அமரர் சபாபதிப்பிள்ளை அவர்களின் உயர்த்த நோக்கு, சமயத்துக்கு அவர் ஆற்றிய அருந்தொண்டுகள், ஆலயங்கள் தோறும் புராணபடனங்கள் ஆற்றி, சமய விருத்திக்கு அவர்செய்த அளப்பரிய சேவைகள். மேலும் மிருக பலியிடுதலை அகற்றவேண்டுமென அயராது அவர் உழைத்தமைகள், போதனைகளைச் சாதனையிற் காட்ட மக்கள் முன்வரவேண்டுமெனப் பலரும் வற்புறுத்தினர்.

### இந்துசாதனம் சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்ளூர் — ஆண்டு | 18/— |
| புறநாடு — ஆண்டு | 50/— |
| [ ஆகாய வழி ] | 75/— |

அதிபர்
459 கே.கே.எஸ். வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உ
திருச்சிற்றம்பலம்.

நின்னுவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோ ரமுதமானாய்
மறைநான்கு மானாய் ஆறங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னனாய் என்னனாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே.

திருச்சிற்றம்பலம்.

— திருநாவுக்கரசு சுவாமிகள்;

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல் படிவம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
மரணசாதன கிரியாமாதிக்கம்: இல. 389

காலஞ்சென்ற சபாரத்தினம் இராசக்கோன் புலேந்திரா என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்திவவர்
சபாரத்தினம் இராசக்கோன் புலேந்திரா
கைம்பெண் இராஜேஸ்வரி, வதிரி, கரவெட்டி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தினல் கொடுக்கப்பட்டு, அதில் ஆதறிணைகிகப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு மாசி மாதம் 28-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

நீதிமன்ற கட்டளைப்படி
இ. விஸ்வலிங்கம்,
பதிவாளர்,

1978 ஆம் ஆண்டு மாசி மாதம் 7-ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது,

94 10, 17-2-78

## ஈட்டு வழக்கில் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல. 13867

1. கந்தையா சிவபாதசுந்தரம் புலோலி தெற்கு புலோலி - வாதி
எதிராக
1. கணபதி முத்தன் (2) பெண் சீதை அல்லது சீதேவி
புலோலி தெற்கு புலோலி — பிரதிவாதிகள்.

மேற் குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விவரிக்கப்படும் ஆதனங்களை 1978-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3-ஆந் திகதி (3-4-78) திங்கட்கிழமை முற் பகல் 9.00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று புலோலி கிழக்கு வென்றிபாகு தேவன்குறிச்சி இறை 'கொத்தியாவத்தை" இது பருத்தித்துறை டிஸதிறிக கோட்டு 2907/P ம் இலக்கப் பிரிவிடல வழக்குக் கடைசித் தீர்வையுடன் அணைக்கப்பட்டதும் உலாந்தா மேஸ்தர் வே. சிவரெத்தினததால் 1948-ஆம் ஆணடு தை மாதம் 30 ந் திகதி 537 ம இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமான படத்தின்படி நிப 1 குளி 12 24/32 இதில் குறித்த படத்தில் 1 ம் இலக்கத் துண்டுக்குரிய குளி 17 30/32 இதில் கிழக்குப் புறமாக குளி 6 4/32 இதுவும் குறித்த படத்தில 2-ம் இலக்கத் துண்டுக்கு குளி 12, 26/32 ம் ஒன்ருயிருக்கிறபடி அதற்குக் குளி 17 30 / 32 எலலை கிழக்கு சேனாதிராஜ சேகாம கைம் பெண் இலெட்சுமிப் பிள்ளைக்குடைய ஆதனம். டெக்கு, வயிரவன் வேலனுக்கும் பெண் வள்ளிக்குமுடைய ஆதனம்: மேற்கு சுப்பிரமணியம கந்தையாவுக்குடைய ஆதனம். தெற்கு கிராமச்சங்க ரேட்டு. இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், கொட்டில், வடலிகள், முழுவதும்,

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா | 3180 | 00 |
| வட்டி ரூபா 3600/ க்கு 15 வீதப்படி | | | |
| 14-2-77 தொடக்கம் 26-5-77 வரை | ரூபா | 135 | 00 |
| வட்டி ரூபா 3915/-க்கு 9 வீதப்படி | | | |
| 26-5-77 தொடக்கம் 3-4-78 விற்பனவுவரை | | 293 | 60 |
| வழக்குச் செலவு | ரூபா | 800 | 00 |
| மொத்த ரூபா | | 4408 | 60 |

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

வி. எம்- ரோட்,
பருத்தித்துறை, 2-2-78

எம் 95, 17-2-

நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுக்திக்கும் இசைந்திருக்க வேண்டும்.

— நாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

கல்லாத மூடரைக் காணவு மாகாது,
கல்லாத மூடர்சொற் கேட்கக்கட னன்று,
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்.
கல்லாத மூடர் கருத்தறி யார்களே.

Ignorant fools, their company should be shunned, their words should not be listened to, they prefer the company of similar fools. Ignorant fools know not the truth.

Hindu Organ

Friday, 17th February, 1978.

# SABOTAGE – NOW A SYSTEM!

Depressing news and distressing reports of unbridled violence at international level are tending to shake the confidence of man in the future of mankind.

Tragedies that had not been heard of in the past have overtaken the world. Responsible persons have been fatally attacked. In short no public officer has been spared peace of mind to carry out his duties.

Disciplinary action against offending officials only brings out open protests in the form of sudden strikes, work to order and other devices of sabotage. Apparently the subtle mischief known as sabotage has been thoroughly systematised.

The dastardly attempt that was unconscionably made by bide-bound criminals at Sydney must be regarded as a glaringly alarming signal for setting-up chaotic conditions in the political arena all the world over.

Shri Moraji Desai, Prime Minister of India referring to this mad manoeuvre hinted at the possibility of a very dangerous revolutionary party being behind the tragic incident. This head-hunting movement appears to have placed a prize on the Indian Premier's valuable head. If such brutal attempts have become common then no conference of nations can be held but with grave risk to limb and life.

The U. N. O will have to deal with this menacing problem at the earliest. This is not a matter for prolonged discussions but is a question of evolving a defensive system against terrorists.

The solemn declarations of the Big Powers that Nuclear weapons should be controlled and at the same time their supply in the sly of arms to combating countries such as Ethiopia - Somalia, Egpt - Israel only indicate feigned good-will and help the growth of malice. Thus what is evident in the happenings in the world at present is the existence of pretended overtures of peace. So long as these stimulated scheming goes on so long will the tendency to subvert peace continue.

Human civilization has come to a halt. People are being reminded of the cruel age of cannibalism. In the fair name of freedom foul deeds are being perpetrated.

The Massacre of Athletes in Munich could not open the eyes of the United Nations Since then several attrocities have been committed And now the Savagery at Sydney.

For the sake of truth let the super powers stop their tall-talk of peace, harmony and what not. Let them call off the Cold War and declare the real war to decide their supremacy.

Or let them understand that in the eyes of the terrorist there is no super or inferior power, big or small personality. And let them act urgently saving themselves and the world with them,

# THOUGHTS OF THAYUMANAVAR

[ The Gurupoojah of Saint Thayumanavar was observed last month. In this connection we reproduce relevant portions from the Life and Writings of Sir Mutu Coomaraswamy by SRI DURAI RAJA SINGAM of Malaysia.]

The hymns of Tayumanavar reflect the ineffable and inexpressible joy of a realised soul in communion with God. They translate into the language of men and cast into a mould of words the untranslatable and transcendental realms of the Eternal and Unchangeable Being. They are in themselves miracles of human expression and as miracles beyond structure and form They are therefore untranslatable. It has been said of verse that, that part of it which makes it poetry is beyond translation. However, there is a difference between clothing a chance passerby on the road without knowing anything about the nature of his being and dressing one's own child so as to bring out its many faceted but essential individuality The difference between translating poetry which is the outpouring of someone else's soul and giving expression in a new form to what one deeply feels oneself but is expressed infinitely better than one ever can, is similar. I feel that the relation between Tayumanavar and Sir Muttu Cumaraswamy to be that of the second kind. They were kindred souls; and therefore even when Sir Mutu Coomaraswamy renders Tayumanavar's hymns into English he is still really expressing Tayumanavar and so doing is expressing the virbrations of his own soul.

The rhythmic prose of (Mutu) Coomaraswamy who was steeped in Hindu philosophy has a style all his own. These graceful and musical translations have over a hundred years been not read by the public. Here it is a case of translating from an Oriental language—a language which does not even belong to the Indo-European group of languages into English. For years these translations in printed form remained unremembered Of equal intrinsic value are his manuscript notes to the text, which fortunately still exist as a fragmentary manuscript, scarcely decipherable and were not finalised for publication. Before these notes could be given to the printers, Sir Mutu died. These notes undoubtedly must be rich in content with the philosophic and religious ideas of which Sir Mutu was a real representative.

The book begins in Chapter I, with 3 hymns which Tayumanavar sang at Trichinopoly at a Congress of Religions) from *Para | Siva Vanakham* which commence the entire collection as found in all editions of Tayumanavar's hymns. The opening hymn is:

### *Para Siva Vanakham*

What is that which, unconfined to this or that spot, but in splendour. fulness of joy, and grace, pervadeth all space ?

What is that which, willing entire millions of worlds to rest in the space of its grace, exists as the life of life ?

What is that which stands unaffected, whilst myriads of religions contending claim it to be "our god," "their god"?

What is that which, whilst this contention spread everywhere, exists as a spirit, all-powerful, happy, eternal ? Again,

What is that which has for its abode the region, where neither light nor darkness is found ?

That — That alone is agreeable to the mind. Let us, viewing all that we see as the display of the form of the unspeakable (Maunam), make obeisance to It.

Some of the finest lines in these translations, depicting symbology and imagery in these devotional poems are the following where the divine experience of Tayumanavar finds spontaneous expression. The Nadanta dance of Nataraja is visualised with flawless charm and matchless poetry by both Saint and translator.

Here are the titles.

Parasiva Vanakkam
Paripuranandam
Porulvanakkam
Chinmayananda Guru
Mouna Guru Vanakkam
Karunakarak Kadavul
Siddha Gnanam
Ananda Mana Param
Sukha Vari
Enkuniraykinta Porul
Sachchidananda Porul
Tejomayanandam
Chit-Sukhodaya Vilasam
Panmala
Kadun Karaiyum
Kallalin
Vairakya Catakam

Among the song offerings of Tayumanavar are ten songs. GOD OF MERCY-KARUNAKARA-K-KADAVUL, sung in praise of the God of Mercy who dances the dance of delight in the *Chit Sabha* trancending one's imagination. He sees Him as the Lord of all faiths

### தாயுமானவர் பாடல்

அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குள்ளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, February 17, 1978.

EDITOR-IN-CHIEF: R. N SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org